உ

கடவுள் துணை.

ஆத்திசூடி சிந்து.

ஓரடித்தங்கப்பண்.

சென்னை-சூளை.

சங்கநிதிவிளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

உ

கடவுள் துணை.

ஆத்திசூடி சிந்து.

ஓரடித் தங்கப்பண்.

வெண்பா.

சென்னைவளரச்சுத் தலைவர்களே செப்பக்கேள்
நன்னெறியாமிச்சிந்தை நாடியே-இன்னொருவர்
அச்சிடவந்தாலும் அவர்க்குவிடைதாரா
இச்சிறுவன் விண்ணப்பமிது.

பொல்லாமனதே
புகழில்லாப்புன் மன
கல்லாதேமனதே கெட்டமனதே
கழறுவேன்கேணினிதாய்

அத்திமுகத்தோனை அனுதினமறவாதே
ஆதிசிவமூர்த்தி அடிகள்மறவாதே
இவ்வுலகில்யாவருக்கும் இடரினைத்தேடாதே
ஈனர்தமைச்சேர எள்ளளவுநினையாதே
உலகத்திலெந்நாளும் குலப்பழுதுபேசாதே
ஊமைகுருடர்முதல் வொருத்தரைமேசாதே
எவர்க்கும்பிரியவனாய் இருக்கவேயென்னுளாய்

ஏழையர் தமைக்கண்டு ஏளனஞ்செய்யாதே
ஐயமெனவந்தோரை நையவேபேசாதே
ஒருத்தர்க்கென்னாளும் ஒருதீங்குந்தேடாதே
ஓதுவித்தோன் தனக்கு ஓர்குறையுஞ்செய்யாதே
ஔவியம்பேசி அகலத்திற்றிரியாதே

அக்கரையாய்பொருளை மனமே
அன்பாகத்தேடிவோய்

கட்டினமனைவிதன்னை கண்ணீர்சோரவையாதே
காசுபணஞ்சேர்த்து கணக்கிட்டலையாதே
கிள்ளைமுதல்பட்சிக்கும் கேடுநினைக்காதே
கீழ்மக்களோடு கிட்டியுறவாடாதே
குற்றம்நினைந்தால் சுற்றமும்பொய்யாதே
கூரானவார்த்தைகூறி கொடுமைவிளைக்காதே
கெடுக்கும்துர்ஜேசரிடம் அடுத்துநீசேராதே
கேட்டுங்கேளாமலே கிட்டிசண்டைசெய்யாதே
கைப்பொருளைநம்பிமெய்ப் பொருளைவிக்காதே
கொம்பனைமார்சண்டைதனில் வம்புதீர்க்கபோகாதே
கோபத்தையெந்நாளும் குடியாகக்கொள்ளாதே

சத்தியத்திற்குட்படுவாய்-மனமே
அசத்தியத்திற்குட்படாதே

சாதிப்போர்தம்மிடஞ் சார்ந்துறவாடாதே
சிறுவர்களோடுநீ சினேகிக்கநாடாதே

சீரில்லாவார்த்தைகளை செவிதனிற்கொள்ளாதே
சுகத்திலிருக்கும்போது அகத்தைப்படைக்காதே
சூதுவாதும்பேசி வேதனைக்குள்ளாதே
செப்புபேரிவ்வுடலைச் சதமென் றுயெண்ணாதே
சேதிசொல்லவந்தோரைச் சீறிமுழியாதே
சையெனவேயாரும் சாற்றத்திரியாதே
சொல்லும்பெரியோர்தம் சொல்லைநீதட்டாதே
சோம்பருடையரோடு தேங்கித்திரியாதே

சௌரியந்தன்னைப்பேசி மனமே
சங்கைகொண்டு நின்றிடாதே

தந்தையதுவார்த்தை தள்ளிநடக்கொணாது
தாயின்மனமெரிய தாய்வகைச்சொல்லொணாது
திருடர்களோடுநீ சிநேகஞ்செய்யொணாது
தீவினையாமென்னுந் தீங்கைநினைக்கொணாது
துன்னும்பெரியோரை தூஷணைசெய்யொணாது
தூரிக்கல்ப்போரைத் தணைவரென்றெண்ணொணாது
தெய்வம்தில்லையெனச் செப்பவுமெண்ணாது
தேவியைவிட்டுவிட்டு தெரிவிற்றிரியொணாது
தையலார்மங்கையவள் தன்சொல்லைகேட்கொணாது
தோல்லைஎன்றில்லரத்தை துறந்துமேசெல்லொணாது
தொப்புந்தடாகம்பூந் தோட்டபழிக்கொணாது

நல்லோர்மனதுநோக-மனதே
நாட்டிற்றிரியொணாது

நாவலர்கள்தமக்கு நவின்றதைத்தரவேண்டும்
நித்தமிரப்போர்க்கு நினைவாய்த்தரவேண்டும்
நீதிபக்தியை நிதானித்தரியவேண்டும்
நுட்பமதாயொருவர் பெட்பையரியவேண்டும்
நூல்கள்புராணமதை நுட்கருத்தரியவேண்டும்
நெஞ்சுருதியாக நிலத்துலறையொணாது
நேத்திருந்தாரென்று நிசயேவொண்ணொணாது
நையவொருவரைப் பையவேபேசொணாது
ணொத்துசொல்லாரையும் நுணுக்கமாய்சொல்லொணா

பத்தமில்லர்க்கொடிய மனதே
பகருவேனின்னமுங்கேள்

பாதகத்தொழிலைப் பார்க்கவுமொண்ணாது
பிறர்மனையின்மேல் பிரியம்வைக்கவொண்ணாது
பீட்டையவென்றால் பெரியோர்கள்நேசந்தேடு
புல்லர்கள்தம்போடு புணர்ந்தேகவொண்ணாது
பூமியிலிரப்போரை புகுந்தடிக்கவொண்ணாது
பெண்ணாசையாலேநீ பித்தனாகவொண்ணாது
பேடியென்றேயுலகில் பேர்வகிக்கவொண்ணாது
பைநாகத்தோடுநீ பரிக்ஷிக்கவொண்ணாது
பொறுமையெந்நாளும்நீ பொருந்தியிருக்கவேண்டும்
போகாதயிடத்திற்கு போகவுமொண்ணாது

மண்ணின்மீதினில்நின்று-மனதே
வழக்கோரஞ்சொல்லொணாது

மாமியார்வீட்டினில் மருவியிருக்கொணாது
மித்துரர்க்குத்துரோகம் நினைக்கவேயொண்ணாது
மீண்டொருவர்வந்தாலும் விளம்பவேபொண்ணாது
முன்னோர்மொழியை முனிந்தழிக்கவொண்ணாது
மூடர்களதம்மோடு கூடவேயொண்ணாது
மெல்லியரைவிட்டு வேரிடஞ்சொல்லொணாது
மேழியதனை வெறுக்கவேயொண்ணாது
மையனைக்கண்ணிதம் வலையிற்சிக்கொணாது
மொழிந்ததோர்சொல்லை மறக்கவுமொண்ணாது
மோசமதுசெய்து காசைச்சேர்க்கொண்ணாது

வஞ்சகரோடுறவு மனதே
வையாதொருநாளுமே

வாதஞ்சொல்வேனென்று வழங்கியலையாதே
விலைக்குறைக்காதே வீண்வப்புபேசாதே
வீணனவார்த்தைகூறி காலமொழிக்கொணாதே
வுண்டதோர்வீட்டுக்கு ரெண்டகம்நினையாதே
வூராருடைமைக்கு பேராசைகொளளாதே
வெஞ்சமரின்முன்னே வேடிக்கையாய்நில்லாதே
வேந்தன்றன்சொல்லைநீ வெறுத்துநீதள்ளாதே
வையகத்தோர்சொல்லும் வழியைத்தடுக்காதே

ஒருவர்பேச்சைநீ ஒருவரோடுகூறாதே
ஓதுமிராசரத்னம் உரைத்ததைதள்ளாதே

ஔவைசொன்னதுமிதுவே மனதே
ஐயனருள்பெற்றுவாழி

வேதியர்குலமும்வாழி வேந்தர்கள்தானும்வாழி
ஆதியிலவ்வைசொன்ன அருந்தமிழ்நீதிவாழி
கோதிலாக்குணம்படைத்த குவலயத்தோர்கள்வாழி
நீதிநன்னெறிகற்றோர்க நீடூழிவாழிவாழி.

முற்றிற்று.

உ

சிவமயம்.

பொதிகைமாமலைசிவகீர்த்தனை.

இராகம்-இந்துஸ்தான்.

பல்லவி.

பிச்சையிடாநின்ற பேதைமடையர்கள்
கச்சேரிக்கேகொடுப்பார் சிவனே
பிச்சையிடாநின்றபேதை

அநுபல்லவி.

உச்சிதமாநரஜென்மம்கடைத்தேர
இச்சைவையாதகுல அச்சுதாகேழ்க்கினும் பிச்

சரணங்கள்.

இந்த்ராதிசாலப்பிரசங்கள்செய்தாலவர்
சிந்தைகரையார்கள் சிவனே
தந்தைதாயார் பசியாலேவிரந்தாலும்
தாழாரட்டம்பத்தினை வழிபும்பாவி பிச்

வெள்ளைசள்ளையாக வஸ்திரமுடுத்தினல்
நல்லமுதலியென்பார்-சிவனே
அல்லைபறுத்த அடியார்களைக்கண்டால்
தள்ளுதள்ளுதெருவில் நில்லுமென்றபாவி பிச்

ஆஸ்திகுலமென்றுபேதம் நகம்பர்தன்
நேசம்பிணிவேண்டேன்-சிவனே
நாஸ்திதாசர்களை பூசித்தவன்வார
வாசிவீரமுனிஈசானந்தங்கேழ்க்க பிச்

பொதிகைமாமலை சிவகீர்த்தனை.

முற்றிற்று.